**புலத்சிங்கள பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 15 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான காணிகளதும் கட்டிடங்களதும் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(ஆ) மதுராவல பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் புலசிங்கள பிரதேச சபைக்கு ரூபா 221,804 செலுத்தப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்ததால் புலத்சிங்கள பிரதேச சபைக் கணக்குகளில் அது பெற வேண்டிய தொகையாகக் காட்டப்பட வேண்டுமாயினும், அக் கணக்குகளில் மதுராவல பிரதேச சபைக்கு ரூபா 348,928 கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ளதாகக் காட்டப்பட்டுள்ளது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,486,109 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 7,480,372 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 11,649,735 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,169,363 பின்னடைவு தென்பட்டது.

செலவினம் ரூபா 13,663,228 அதிகரித்தமையே நிதிப் பெறுபேற்றின் ரூபா 4,169,363 பின்னடைவுக்கான பிரதான காரணியாகும்.

**2. வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை**

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 2,094 | 1,691 | 487 |
| (ii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 276 | 276 | - |

### 2.2 தீர்வை வரி

------------------------------------

(அ) மீளாய்வாண்டிற்கெனப் பட்டியலிடப்பட்ட தீர்வை வரி ரூபா 2,052,880.20 ஆகும். அதில் 80.45 சதவீதமான ரூபா 1,651,587.78 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான ரூபா 758,136 நிலுவை மீதியில் 94.08 சதவீதமான ரூபா 713,267 மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா 446,162 ஆகவுமிருந்தது. இதற்கமைய, மீளாய்வாண்டினது ஒட்டுமொத்த தீர்வை வரி அறவிடப்படுவதிலான செயல் முன்னேற்றம் 84.13 சதவீதமாகியது.

(இ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை வரி நிலுவை மீதி ரூபா 446,162 ஆகும். இதில் 93 கூறுகளிலிருந்து 01 முதல் 03 ஆண்டுகளாக ரூபா 18,587 , 90 கூறுகளிலிருந்து 03 முதல் 05 ஆண்டுகளாக ரூபா 6,294 12 கூறுகளிலிருந்து 05 முதல் 10 ஆண்டுகளாக ரூபா 19,988 என்பன உள்ளடங்கியிருந்தன. இவற்றை அறவிடுவதற்குச் சபை முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஈ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் புலத்சிங்கள பிரதேச சபை புதிய தீர்வை வரி அறவீடுகளை இனங்காணப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏக்கர் வரி

------------------

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 140,462 ஆகும். 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் இதில் ரூபா 54,160 அதாவது 38 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. தற்போதைய பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 40,887 ஆகும். இதில் 97 சதவீதமான ரூபா 39,733 அறவிடப்பட்டிருந்தது. இதற்கமைய, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 87,457 ஆகும்.

**2.2.4 ஏனைய வருவாய்**

(அ) மணல் துறை மூலமான வருவாய்

(i) பொறுப்பான உத்தியோகத்தர்களின் எதுவித மேற்பார்வை மற்றும் சரியான உள்ளகக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படாமை இல்லாது நடைபெற்றவாறிருந்த மணல் துறையின் வருவாய் ஒரு கியூப் மணலின் விலை அதிகரித்திருந்த நிலையிலும் 2015 முதல் 2016 வரை 331 சதவீதத்தால் அதாவது ரூபா 1,030,905 குறைவடைந்திருந்தது.

(ii) இம்மணல் துறையுடன் இணைந்த கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாகக் களஞ்சிய பொறுப்பு உத்தியோகத்தர், மணல்துறை மேற்பார்வை உத்தியோகத்தர் மணல் துறைப் பொறுப்பாளர் ஆகிய மூவரினதும் கையிருப்புப் பதிவேடுகளின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்களில் பெருமளவு முரண்பாடுகள் நிலவின.

(ஆ) விளம்பரப் பலகை வருவாய்

1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (ஏற்றுக்கொள்ளப்பட்ட உப விதிகள்) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் விளம்பரங்களைக் காட்சிக்கு வைப்பதற்கு சபையின் செயலாளரால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரமின்றி அவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது அவ்வாறான அதிகாரமின்றி 48 நிரந்தர அறிவித்தல் பலகைகளும் 34 பதாதைகளும் காட்சி வைக்கப்படுவதற்கான ரூபா 49,506 வருவாய் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனத் தெரிய வந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான பிரசார அறிவித்தல்கள் தொடர்பான கணிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கட்டணம் அறவிடப்பட்ட அறிவித்தல் பலகைகளை இனங்காண்பதற்கு அவற்றிற்குக் குறியீடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கழிவுப் பொருள் நிலையத்துடன் இணைந்த கொடுக்கல் வாங்கல்கள்

இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கார்பனிக் உர விற்பனை தொடர்பாக முறையான விதி முறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. கடன் விற்பனை தொடர்பாக சபைத் தீர்மானம் எதுவும் இருக்கவில்லை. அத்துடன், அநேக ஆண்டுகளாக உரம் கடனுக்கே விற்பனை செய்யப்பட்டவாறிருந்தது. இவ்வாறாக, 2016 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் சபைக்குக் கிடைக்கப்

பெறாததும் சபை இனங்கண்டு கொள்ாது போனதுமான பெற வேண்டிய தொகை ரூபா 45,750 ஆகும்.

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 1,235,667 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,643,596 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

(அ) 2006 ஏப்ரல் 15 முதல் புலத்சிங்கள பிரதேச சபை புலத்சிங்கள மற்றும் மதுராவல என இரு பிரதேச சபைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இதற்கமைய, மதுராவல பிரதேச சபைக்குரிய சொத்துக்களும் பொறுப்புகளும் பிரித்து வழங்கப்பட வேண்டுமாயினும், 2017 யூலை 13 ஆந் திகதியளவிலும் அச் சொத்துக்களும் பொறுப்புகளும் பிரித்து வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) டபள் கெப் வாகனம் விபத்துக்குள்ளானமை

சபைக்குச் சொந்தமான டபள் கெப் வாகனமொன்று 2016 மார்ச் 11 ஆந் திகதியன்று திடீர் விபத்துக்குள்ளானது. அவ்விபத்து சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இழப்புகளும் நட்டங்களும் தொடர்பாக 102 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி பதிவேடு ஒன்று பேணப்படாததுடன், விபத்தால் ஏற்பட்ட இழப்பு / நட்டம் பதிவு செய்யப்பட்டிருக்கவுமில்லை.

(ii) விபத்து சம்பந்தமாக பொலிசுக்குப் புகாரிடப்படவில்லை. 104(3) ஆம் நிதிப்பிரமாணத்தின் படி விபத்து நடைபெற்று 07 நாட்களுக்குள்

ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்படவில்லை.

(iii) இழப்பு/நட்டம் ஏற்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் பூரண அறிக்கை ஒன்று 104(4) ஆம் நிதிப் பிரமாணத்தின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2017 யூலை 13 ஆந் திகதியளவிலும் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வாகன விபத்து, பழுபார்த்தல், காப்புறுதி, இழப்பீட்டைப் பெறுதல், கொடுப்பனவு தொடர்பான எந்த அறிக்கையையும் சபை பதிவு செய்திருக்கவில்லை.

**3.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

2016 டிசெம்பரில் ரூபா 2,857,155 செலவில் புதிய ஆயுர்வேதக் கட்டிடமும் ரூபா 33,757,083 செலவில் புலத்சிங்கள வாராந்தச் சந்தையுடன் கூடிய வர்த்தகக் கூட்டுத் தொகுதியும் நிர்மாணிக்கப்பட்டிருந்தபோதும், 2017 யூலை 13 ஆந் திகதியன்றும் அக்கட்டிடங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

இக் கட்டிட நிர்மாண வேலைக்கான மதிப்பீடு ரூபா 3.4 மில்லியனாகும். ஒப்பந்தம் வழங்கப்பட்ட தொகை ரூபா 2,974,347 ஆகும்.

(i) அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கமைய கட்டிடம் நிர்மாணிக்கப்படவில்லை.

(ii) கட்டிடத்தின் இரு பக்கங்களிலும் நடை பாதைகள் அமைக்கப்படவில்லை. கழிவறைக்கான கழிவுக் குழாயிடப்பட்டிருந்தபோதும், கழிவறைக் குழி நிர்மாணிக்கப்படவில்லை.

(iii) வலது பக்கச் சவர் கீழ்றிறங்கயவாறு அமையவில்லை. கட்டிடத்தின் இருபக்கங்களிலும் கற்களும் மண்ணும் அகற்றப்படாதிருந்தன. முன் பக்கத்தே போடப்பட்ட கற்கள் கீழிறங்கியிருந்தன.

**3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான உப விதிகள் தயாரிக்கப்படாததுடன், அதன் பொருட்டு மேல் மாகாண திண்மக் கழிவுப் பொருள்

முகாமைத்துவ உப விதிகள் கடைப்பிடிக்கப்பட்டிருந்தன. சபை கழிவை அகற்றியவாறிருக்கும் இடத்திற்கு அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை.

## 3.5 செயலாற்றல்

---------------------------------

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அதன் ஆரம்ப திகதி குறிப்பிடப்பட்டிருந்தபோதும், முடிவு திகதி குறிப்பிடப்படாமையால் இலக்கிடப்பட்ட தினங்களில் அவை நடைபெற்றனவா என்பதைப் பரிசீலிக்க முடியவில்லை.

(ii) 2016 பெப்ரவரியில் வாகனப் பராமரிப்பு கூறு ஒன்றை ஆரம்பிப்பதற்கிருந்தபோதும், குறித்த பணி 2017 பெப்ரவரி மாதத்திலேனும் நடைபெறவில்லை.

(iii) சபையினது வேலைகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாததால் வேலைப் பிரிவின் செயல் முன்னேற்றத்தை நிர்ணயிக்க முடியவில்லை.

(iv) கழிவு முகாமைத்துவத்தை முறைப்படி அமையுமாறு செய்வதற்கு 119 கழிவுப் பொருள் சேகரிப்பு வாளிகளை வழங்கும் பணி 2016 ஏப்ரல் மாதத்தில் முடிவடைய வேண்டுமாயினும், 2016 ஏப்ரல் 18 ஆந் திகதியளவில் 65 வாளிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(v) செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி சபையின் கேட், மதில் சுவர் என்பன பழுதுபார்க்கப்படவில்லை.

(vi) செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி சபைக்குச் சொந்தமான வீதிகளை வர்த்தமானியில் பிரசுரித்தல், மயானங்களது நில அளவையை மேற்கொண்டு அவற்றை வெவ்வேறாக்குதல், சபைக்குச் சொந்தமான சொத்துக்களை இனங்காணுதல் என்பன 2017 பெப்ரவரி மாதமளவிலும் நடைபெற்றிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) பாதீடு

(ஈ) வாகனக் கட்டுப்பாடு